ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/2 - 2016 සැප්තැම්බර් මස 26 වැනි සඳුදා - 2016.09.26

*1986/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத்துறைசார் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1998, சனவரி 2 ஆந் திகதிய 1009 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத் துறைசார்ந்த உத்தியோகத்தர்களின் இணைந்த சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு இடைக்கிடையே மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அல்லது அதன் கீழ் இடம்பெற்றதாகக் கருதப்பட்ட அல்லது ஏதேனும் ஒரு கட்டத்திற்குப் பாதிப்புகள் ஏற்படாதவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுத்துறை சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.*

*அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்*

எச். எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
*அரச சேவை ஆணைக்குழு.*

*2016, செத்தெம்பர் 26.*

1. *அமுல்படுத்தப்பட்ட திகதி மற்றும் இப்பிரமாணக் குறிப்பு 2016.09.26 ஆந் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட வேண்டும்.*

2. **நியமனம்**

| | |
|---|---|
| 2.2.1. நிறைவேற்று சேவைப்பிரிவின் முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பு | அரச சேவை ஆணைக்குழு |
| மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவு<br>முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 3 சேவைப் பிரிவு | அரச சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்ட விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் |

3. **சேவைப் பிரிவு/சேவை வகை**

| | |
|---|---|
| நிறைவேற்று சேவைப் பிரிவு | I ஆம் தரம்<br>II ஆம் தரம்<br>III ஆம் தரம் |
| முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பு | |
| மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவு | I ஆம் தரம்<br>II ஆம் தரம்<br>III ஆம் தரம் |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு 2 சேவைப் பிரிவு | I ஆம் தரம்<br>II ஆம் தரம்<br>III ஆம் தரம் |

4. **செயற்பாட்டுப் பணிகள்**

விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்கள் இணைந்த சேவையின் சகல தரங்களுக்குரிய உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகள் பல்வேறுபட்ட வகைகளுக்கமைய அமுல்படுத்தப்படுகின்றது. ஆசிரியர், விளையாட்டு ஆலோசகர், விளையாட்டு நடுவர் மற்றும் நிபுணத்துவ பயிற்சியாளர்களின் பணிகளும் விளையாட்டுடன் தொடர்புபட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நியமனப் பொறுப்பாளரினால் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுத் துறைக்குரிய வேறு பணிகளும் இச்சேவையின் தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. **சம்பளம்**

5. 1 சம்பளக் குறியீட்டு இலக்கம்

| | |
|---|---|
| நிறைவேற்று சேவைப் பிரிவு | SL - 1 - 2016 |
| முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பு - தலைமையக விளையாட்டு உத்தியோத்தர் | MN - 7 - 2016 |
| மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவு | MN - 3- 2016 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 2 சேவைப் பிரிவு | MT - 2 - 2016 |

5.2. சம்பளம் அளவு

MN - 2 - 2016 சம்பளக் குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக ரூபா 30,140 - 10X 350- 11X370- 10X 560- 10X660- ரூபா 49,910.

MN - 3 - 2016 சம்பளக் குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக ரூபா 31,040 - 10X 445- 11X660- 10X730- 10 X 750 ரூபா 57,550.

MN - 7 - 2016 சம்பளக் குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக ரூபா 41,580 - 11X 755- 18X1,030- ரூபா 68,425.

SL - 1 - 2016 சம்பளக் குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக ரூபா 47,615 - 10X 1,335- 8X1,630-17X2,170- ரூபா 110,895

5.3. தர முறைக்குரியதாக ஆரம்பச் சம்பள அளவு மற்றும் ஆரம்பச் சம்பள மட்டம் (ரூபா)

| சேவைப் பிரிவு | தரம் | ஆரம்பச் சம்பள அளவு | ஆரம்பச் சம்பள மட்டம் ரூபா சதம் |
|---|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 2 - சேவைப் பிரிவு MT - 2- 2016 | III ஆம் தரம் | ஆரம்பக் கட்டம் | 30,140.00 |
| | II ஆம் தரம் | 12 கட்டம் | 34,010.00 |
| | I ஆம் தரம் | 23 கட்டம் | 38,270.00 |
| மேற்பார்வை முகாமைத்துவ - உதவியாளர்- தொழில்நுட்ப சேவைப் பிரவு MN - 3 | III ஆம் தரம் | ஆரம்பக் கட்டம் | 31,040.00 |
| | II ஆம் தரம் | 12 கட்டம் | 36,150.00 |
| | I ஆம் தரம் | 23 கட்டம் | 43,480.00 |
| முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பு - தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் - MN 7 | | ஆரம்பக் கட்டம் | 41,580.00 |
| நிறைவேற்று சேவைப் பிரிவு - SL 1 | III ஆம் தரம் | ஆரம்பக் கட்டம் | 47,615.00 |
| | II ஆம் தரம் | 12 கட்டம் | 62,595.00 |
| | I ஆம் தரம் | 20 கட்டம் | 76,175.00 |

6. **சேவைக்குரிய பதவி**

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர், அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை மற்றும் தரம்

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | பதவி அங்கீகரிக் கப்பட்ட தரம் | பதவி அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவு | அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|---|
| விளையாட்டு உத்தியோகத்தர் | III, II, I | MT 02- 2016 | 40 | உப ஆவணம் 01 இல் உள்ளடக்கப் பட்டுள்ளது |
| விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் | III, II, I | MN 03- 2016 | 103 | |
| தலைமையக விளையாட்டு உத்தியோ கத்தர் | - | MN 07- 2016 | 20 | |
| உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் | III, II | SL 01- 2016 | 04 | |
| விளையாட்டுப் பணிப்பாளர் | I | SL 01- 2016 | 01 | |

6.2 இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| விளையாட்டு உத்தியோகத்தர் | 40 |
| விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் | 103 |
| தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் | 20 |
| உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் | 04 |
| விளையாட்டுப் பணிப்பாளர் | 01 |

தரப்படுத்தப்பட்ட பதவி உயர்வுச் செயற்பாடுகளுக்காக அவ்வப் பதவியில் III, II மற்றும் I சகல தரங்களிலும் இணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கைக்குரியதாக கருத்தில் கொள்ளப்படும்.

6.3 பதவி/பதவிகளின் தன்மை : நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய சம்பளம் கொண்டது.

7. **ஆட்சேர்ப்பு முறைகள்**

7.1 விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 2 சேவைப் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறை.

7.1.1 ஆட்சேர்ப்பு விகிதாசாரம்

| கொள்ளளவு | விகிதாசாரம் |
|---|---|
| திறந்த | 100% |
| மட்டுப்படுத்தப்பட்ட | - |
| திறமை | - |

7. 1.2 திறந்த ஆட்சேர்ப்பு

7.1.2.1. ஆட்சேர்ப்பு செய்யும் வகுப்பு : முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 2 (MT 02- 2016) சேவைப்பிரிவின் III தரம்

*7.1.2.2 தகைமைகள் :*

*7. 1.2 .2.1 கல்வி மற்றும் தொழிற் தகைமை*

*(அ)*

I. *சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;*

*மற்றும்*

II. *க. பொ. த. (உ. த) பரீட்சையில் சகல பாடங்களிலும் சாதாரண சித்தியினைப் பெற்றிருத்தல், (பொதுச் சாதாரணப் பரீட்சை தவிர);*

*மற்றும்*

III. *விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவில் மாகாண மட்டத்தில் (மாவட்டங்களுக்கிடையே) நடைபெறும் போட்டியில் I ஆவது அல்லது 2 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல். தேசிய விளையாட்டு விழாவில் 1, 2 அல்லது 3 ஆம் இடங்களைப் பெற்றிருத்தல், விளையாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கத்தின் மூலம் நடாத்தப்படும் தேசிய கிண்ணத்திற்கான போட்டிகளில் 1, 2 அல்லது 3 ஆம் இடத்தைப் பெற்றிருத்தல்.*

*அல்லது*

*(ஆ)*

I. *சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;*

II. *தெற்காசிய போட்டி, ஆசியப் போட்டி பொதுநலவாய சபைப் போட்டி, ஒலிம்பிக் போட்டி அல்லது உலகக் கிண்ண போட்டிக்காக இலங்கையைப் பிரதிநிதித்துப்படுத்தி 1, 2 அல்லது 3 ஆவது இடத்திற்காக பதக்கம் பெற்றிருத்தல்.*

**குறிப்பு** :

* *மேற்கூறப்பட்ட தகைமைகளின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் 3 வருடங்களுக்குள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் திறமை (NVQ) மட்டம் (6) இலான விளையாட்டுத்துறைக்குரியதான தொழில்நுட்ப டிப்ளோமா பெற்றுக்கொள்வது சேவையினை நிரந்தரப்படுத்துவதற்குத் கட்டாயமானதாகும். இது தேசிய தொழில்சார் திறமை (NVQ) மட்டம் (06) கொண்ட விளையாட்டுத் துறைக்குரியதான தொழில்நுட்ப டிப்ளோமாவை முதல் (03) ஆண்டுகளுக்குள் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் சேவை தகுதியான காலத்தின் இறுதியில் நிரந்தரப்படுத்தப்படாது என்பதுடன் அவர்களின் சம்பளப்படி உயர்வு நிறுத்தப்படும். அவ்வாறு சம்பளப்படி உயர்வினை நிறுத்துதற்குட்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பளப்படி உயர்வு நிறுத்தப்பட்ட தினம் தொடக்கம் (02) வருட காலங்களுக்குள் தேசிய தொழில்சார் தகைமை (NVQ ) மற்றும் மட்டம் (06) கொண்ட விளையாட்டுத் துறைக்குரியதான தொழில்நுட்ப டிப்ளோமாவை பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரது நியமனம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வினைத்திறன் இன்மையின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட வேண்டும்.*

*7.1.2.2.2 அனுபவம் : உரிய துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும் .*

*7.1.2.2.3 உடற் தகைமை :*

*சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல் மற்றும் உளத் தகைமை கொண்டவராக இருக்க வேண்டும்.*

7.1.2.2.4 ஏனைய தகைமைகள் :

I. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் ;
II. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருக்க வேண்டும் ;
III. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினமன்று 7.1.2.2 மற்றும் 7.1.2.3 (குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைத் தவிர) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

7.1.2.3 வயது :

குறைந்தபட்ச வயதெல்லை 18 வருடங்கள்
உயர்ந்தபட்ச வயதெல்லை 35 வருடங்கள்

7.1.2.4 ஆட்சேர்ப்பு முறை

7.1.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை - சம்பந்தப்பட்டதல்ல

7.1.2.4.2. தொழில்சார் பரீட்சை - உடற்தகைமையினை மதிப்பீடு செய்வதற்காக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் விளையாட்டு வைத்திய நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரயோகப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். உடற்தகைமைப் பரிசோதனை கீழ் குறிப்பிடப்பட்ட பிரிவினை உள்ளடக்கியுள்ளது. மீள் செயற்பாட்டு வேகம், நெகிழ்வுத் தன்மை, வயிற்றின் சக்தி, இருகரங்களினதும் சக்தி, உடற்பலம், வேகம் மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி.

7.1.2.4.3. தகைமையினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கும் பிரதான தலைப்புகள் | உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவு | தேர்ந்தெடுப்பதற்குக் கருத்தில் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமை | 10 | சம்பந்தப்பட்டதல்ல |
| விளையாட்டுத் திறமைகள் | 70 | |
| விளையாட்டு பயிற்றுவிப்பு, போட்டி நடுவர்/போட்டி ஒழுங்குகள் தொடர்பிலான மேலதிக அனுபவம் | 15 | |
| நேர்முகப்பரீட்சையின் போது காண்பிக்கும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பரிசோதனை செய்வதும், தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்துவதும் நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும்.

***குறிப்பு :-***

I. தொழில்சார் பரிசோதனையில் தகைமை பெறும் விண்ணப்பதார்களின் தகைமைகளை மாத்திரம் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்;

II. மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கும் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவை உள்ளடக்கி அவ்வத் தகைமையினை மதிப்பீடு செய்து நேர்முகப் பரீட்சைக்கு விளக்கமான புள்ளி வழங்கும் ஒழுங்குவிதி முறையினை அங்கீகரிக்கும் செயற்பாடுகள் நியமனப் பொறுப்பாளரினால் மேற்கொள்ளப்படும் ;

III. தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்த புள்ளிகளின் திறமைத் தொடருக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய விண்ணப்பதாரர்கள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 02 (MT 02- 2016) சேவையிப் பிரிவின் III தரத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

7.1.2.4.3. 1. தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்.

7.1.2.5 விண்ணப்பம் கோரும் முறை – அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அல்லது பகிரங்க பத்திரிகைகள் உட்பட இணையத்தளங்கள் ஊடாக விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலம்.

7.2 விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவை மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்ப சேவைப் பிரிவின் விளையாட்டு பயிற்சிப் பதவிக்கு சேர்த்துக்கொள்ளல்.

7.2.1 ஆட்சேர்ப்பு விகிதாசாரம் .

| கொள்ளளவு | விகிதாசாரம் |
|---|---|
| திறந்த | - |
| மட்டுப்படுத்தப்பட்ட | 100% |
| திறமை | - |

7.2.2 ஆட்சேர்ப்பு:– சம்பந்தப்பட்டதல்ல

7.2.3. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு (பயிற்றுவிப்பாளர் பதவிக்கு)

**குறிப்பு** – முதலில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்காக மத்திய அரசின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அவ்வாறு மத்திய அரசின் விளையாட்டுத்துறை உத்யோகத்தர்களை சேர்த்துக் கொண்டதன் பின்னர் தொடர்ந்தும் வெற்றிடங்கள் இருப்பின் மாத்திரம் மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பம் கோரி மட்டுப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் தகைமைகளுக்கமைய எஞ்சிய வெற்றிட எண்ணிக்கைக்காக ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

7.2.3.1 ஆட்சேர்ப்பு செய்யும் வகுப்பு : மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் (MN 3 – 2016) சேவைப்பிரிவின் III தரம்.

7.2.3.2 தகமைகள் :

7.2.3.2.1. கல்வி மற்றும் தொழிற் தகைமை :

I. இச்சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்குரியதான 7.1.2.2.1 இல் (அ) அல்லது (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்;

II. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் ளப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மற்றும் மட்டம் (06) கொண்ட விளையாட்டுத் துறைக்குரியதான தொழில்நுட்ப டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்;

III. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் உரிய விளையாட்டுக்காக நடாத்தப்படும் (03) மாதங்களை விடக்குறையாத பயிற்றுவிப்பாளர் பாடநெறியினைத் தொடர்ந்து சித்தியடைந்திருத்தல் அல்லது விளையாட்டுச் சட்டத்தின் கீழ் உரிய துறைக்குரிய விளையாட்டுச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட பயிற்றுவிப்பாளர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

7.2.3.2.2. அனுபவம் :

(அ) மத்திய அரச சேவையிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களுக்காக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் (08) வருட கால தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் (08) சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றுள்ள விளையாட்டு உத்தியோகத்தராக இருத்தல்.

(ஆ) மாகண அரச சேவையின் உத்தியோகத்தர்களுக்காக விளையாட்டுத் துறைக்குரிய விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சமமான பதவியில் குறைந்தபட்சம் (08) வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மாகாண அரச சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல்.

7.2.3.2.3. உடற்தகைமை :

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல் மற்றும் உளத் தகைமையினைக் கொண்டிருக்க வேண்டும்.

7.2.3.2.4. ஏனைய தகைமைகள்

I. பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல்.
II. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய தகைமைகளைப் பரிசோதனை செய்யும் தினத்திற்கு முன்னர் (10) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விடக்கூடிய செயற்சாதனையினைக் காண்பித்திருத்தல்.
III. அண்மித்த 05 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
IV. உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.
V. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினமன்று 7.2.3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருத்தல்.

7.2.3.3 வயது : சம்பந்தப்பட்டதல்ல

7.2.3.4 ஆட்சேர்ப்பு முறை :

7.2.3.4.1. எழுத்து மூலப்பரீட்சை – சம்பந்தப்பட்டதல்ல
7.2.3.4.2. தொழில்சார் பரீட்சை – சம்பந்தப்பட்டதல்ல
7.2.3.4.3. தகைமையினை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சை

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு | தேர்ந்தெடுப்பதற்காக கருத்தில் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிக சேவை அனுபவம் | 30 | சம்பந்தப்பட்டதல்ல |
| மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமை | 25 | |
| விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் காண்பிக்கப்பட்ட பதவிகள் | 20 | |
| விளையாட்டு பயிற்றுவித்தல் / போட்டி நடுவர் / போட்டி ஒழுங்கமைப்பு தொடர்பான மேலதிக அனுபவங்கள் | 20 | |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

- விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்காக மீண்டும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

- தகைமைகளைப் பரிசீலனை செய்யும் செயற்பாடுகள் தகைமைகளை மதிப்பீடு செய்தல் நேர்முகப் பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு :-**

(i) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவினை உள்ளடக்கி அவ்வத் தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தி நேர்முகப் பரீட்சைக்காக விளக்கமான முறையில் புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகளை அங்கீகரிக்கும் செயற்பாடுகள் நியமனப் பொறுப்பாளரினால் மேற்கொள்ளப்படும்.

(ii) தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கமைய விண்ணப்பதாரர்களை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (MN 3-2016) சேவைப் பிரிவின் III ஆம் தரத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

7.4.3.4.3.1. தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சை சபையின் நியமனப் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்

7.2.3.5. விண்ணப்பம் கோரும் முறை - பகிரங்க அறிவித்தலை பிரசுரித்தல் மற்றும் இணையத்தளம் ஊடாக அறிவித்தலை வெளியிடுவதன் மூலம்

7.2.4 திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல் - சம்பந்தப்பட்டதல்ல.

7.3. விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பின் தலைமை விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறை

7.3.1 ஆட்சேர்ப்பு விகிதாசாரம்

| கொள்ளளவு | விகிதாசாரம் |
|---|---|
| திறந்த | - |
| மட்டுப்படுத்தப்பட்ட | 100% |
| திறமை | - |

7.3.2. திறந்த ஆட்சேர்ப்பு : சம்பந்தப்பட்டதல்ல

7.3.3. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :

7.3.3.1. ஆட்சேர்ப்பு செய்யும் வகுப்பு : முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பு

7.3.3.2. தகைமைகள்:

7.3.3.2.1. கல்வி, தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் :

I. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத் தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவின் I தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

II. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்த ர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவின் II தரத்தின் (08) வருட கால தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல்.

மற்றும்

III. விளையாட்டு அபிவிருத்தித் திணைகளத்தின் விளையாட்டு உத்தியோக த்தர்களின் இணைந்த சேவை மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப

சேவைப் பிரிவின் III தரத்தின் பதவியில் (05) வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தினால் விளையாட்டு அல்லது முகாமைத்துவத் துறைக்குரியதான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

7.3.3.2.2. உடற்தகைமை : இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7.3.3.2.3. ஏனைய தகைமைகள் :

I. பதவியில் நிரந்தப்படுத்தப்பட்டிருத்தல்.

II. அண்மித்த 5 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

IV. உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்

V. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினமன்று 7.4.3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.3.3.3 வயது : சம்பந்தப்பட்டதல்ல

7.3.3.4 ஆட்சேர்ப்பு முறை :

7.3.3.4.1. எழுத்து மூலப்பரீட்சை : சம்பந்தப்பட்டதல்ல

7.3.3.4.2. தொழில்சார் பரீட்சை : சம்பந்தப்பட்டதல்ல

7.3.3.4.3. பொதுவான நேர்முகப் பரீட்சை : சம்பந்தப்பட்டதல்ல

7.3.3.4.4. தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப்பரீட்சை:

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவு | தேர்ந்தெடுப்பதற்காக கருத்தில் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிக சேவை அனுபவம் | 30 | சம்பந்தப்பட்டதல்ல |
| மேலதிக கல்வித் தகைமை | 25 | |
| தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் காண்பிக்கப்பட்ட விசேட திறமைகள் | 20 | |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 20 | |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்பட்ட திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

- விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்காக மீண்டும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
- தகைமைகளைப் பரிசீலனை செய்யும் செயற்பாடுகள் தகைமைகளை மதிப்பீடு செய்தல் நேர்முகப் பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு :-**

(i) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவினை உள்ளடக்கி அவ்வவ் தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தி நேர்முகப் பரீட்சைக்காக விளக்கமான முறையில் புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகளை அங்கீகரிக்கும் செயற்பாடுகள் அரச சேவை ஆணைக்குழு சபையினால் மேற்கொள்ளப்படும் ;

(ii) தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கமைய விண்ணப்பதாரர்கள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

7.3.3.4.4.1. தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சை சபையின் நியமனப் பொறுப்பாளர் : அரச சேவை ஆணைக்குழுவாகும்.

7.3.3.5. விண்ணப்பம் கோரும் முறை – பகிரங்க அறிவித்தலை பிரசுரித்தல் மற்றும் இணையத்தளம் ஊடாக அறிவித்தலை வெளியிடுவதன் மூலம்.

7.3.4 திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல் – சம்பந்தப்பட்டதல்ல

7.4. விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவை நிறைவேற்ற சேவைத் தரத்தின் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறை.

7.4.1 ஆட்சேர்ப்பு விகிதாசாரம் :

| கொள்ளளவு | விகிதாசாரம் |
|---|---|
| திறந்த | - |
| மட்டுப்படுத்தப்பட்ட | 100% |
| திறமை | - |

7.4.2. திறந்த ஆட்சேர்ப்பு : சம்பந்தப்பட்டதல்ல

7.4.3. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :

7.4.3.1. ஆட்சேர்ப்பு வகுப்பு : நிறைவேற்று (SL 01- 2016) சேவைப்பிரிவின் III தரம்

7.4.3.2. தகைமைகள்:

7.4.3.2.1. கல்வி, தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் :

I. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத் தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பில் உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

II. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்ப சேவைப் பிரிவின் I தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

III. விளையாட்டு அபிவிருத்தித் திணைகளத்தின் விளையாட்டு உத்தியோக த்தர்களின் இணைந்த சேவை மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்ப சேவைப் பிரிவின் II தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து விளையாட்டு அல்லது முகாமைத்துவத் துறைக்குரியதான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் .

அல்லது

IV. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் பதவி அல்லது பதவிகளின் 10 வருட கால தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விளையாட்டுத்துறைக்குரியதான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

7.4.3.2.2 உடற்தகமை : இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராக இருக்க வேண்டும்.

7.4.3.2.3 ஏனைய தகைமைகள் :

I. பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல்.
II. அண்மித்த 5 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
III. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
IV. உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.
V. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினமன்று 7.4.3.2. இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.4.3.3 வயது : சம்பந்தப்பட்டதல்ல
7.4.3.4 ஆட்சேர்ப்பு முறை :
7.4.3.4.1. எழுத்து மூலப்பரீட்சை : சம்பந்தப்பட்டதல்ல
7.4.3.4.2. தொழில்சார் பரீட்சை : சம்பந்தப்பட்டதல்ல
7.4.3.4.3. பொதுவான நேர்முகப் பரீட்சை : சம்பந்தப்பட்டதல்ல
7.4.3.4.4. தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப்பரீட்சை

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவு | தேர்ந்தெடுப்பதற்காக கருத்தில் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிக சேவை அனுபவம் | 30 | சம்பந்தப்பட்டதல்ல |
| மேலதிக கல்வித் தகைமை | 25 | |
| பயிற்றுவிப்பாளர் பதவியில் மற்றும் தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் காண்பிக்கப்பட்ட விசேட திறமைகள் | 20 | |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 20 | |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்பட்ட திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

- விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்காக மீண்டும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
- தகைமைகளைப் பரிசீலனை செய்யும் செயற்பாடுகள் தகைமைகளை மதிப்பீடு செய்தல் நேர்முகப் பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு :-**

(i) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவினை உள்ளடக்கி அவ்வவ் தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தி நேர்முகப் பரீட்சைக்காக விளக்கமான முறையில் புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகளை அங்கீகரிக்கும் செயற்பாடுகள் அரச சேவை ஆணைக்குழு சபையினால் மேற்கொள்ளப்படும் ;

(ii) தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கமைய விண்ணப்பதாரர்கள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று (SL-01-2016) சேவைப்பிரிவின் III தரத்தின் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

7.4.3.4.4.1. தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சை சபையின் நியமனப் பொறுப்பாளர் : அரச சேவை ஆணைக்குழுவாகும்.

7.4.3.5. விண்ணப்பம் கோரும் முறை - பகிரங்க அறிவித்தலை பிரசுரித்தல் மற்றும் இணையத்தளம் ஊடாக அறிவித்தலை வெளியிடுவதன் மூலம்.

7.4.4 திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல் - சம்பந்தப்பட்டதல்ல

08. **வினைத்திறன் தடைதாண்டல்**

8.1.

| எவ்வகையான வினைத்திறன் தடை தாண்டல் என்பது தொடர்பில் | வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டியது எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் என்பது தொடர்பில் | வினைத்திறன் தடைதாண்டலின் தன்மை - எழுத்து மூலப் பரீட்சை / தொழில்சார் பரீட்சை /சான்றிதழ் பரீட்சை/ஏனையவை | | |
|---|---|---|---|---|
| | | முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 3 சேவைப் பிரிவிற்காக | மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவு | நிறைவேற்று சேவைப் பிரிவு |
| 1 வது வினைத்திறன் தடைதாண்டல் | III தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 01) | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 04) | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 07) |
| 2 வது வினைத்திறன் தடைதாண்டல் | II தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 02) | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 05) | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 08) |
| 3 வது வினைத்திறன் தடைதாண்டல் | I தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு 5 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 03) | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 06) | எழுத்து மூலப் பரீட்சை (இணைப்பு 09) |

8.2. வினைத்திறன்கான் தடைதாண்டல் பரீட்சையை நடாத்துவது எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவை நடாத்தப்படும்.

8.3. வினைத்திறன் தடைதாண்டலுக்குரியதாக பரீட்சையினை நடாத்தும் பொறுப்பாளர்கள் யார் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

9. **மொழித் திறன்:**

9.1.

| மொழி | பெற்றுக் கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் |
|---|---|
| அரச கரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய மொழித் தேர்ச்சியினை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| ஏனைய அரச கரும மொழி | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 இற்கமைய உரிய மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருக்க வேண்டும். |

10. **தரத்திற்குப் பதவியுயர்த்துதல்**

10.1 . விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 3 சேவைப்பிரிவின் III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துதல்.

10.1.1 பொதுச் செயற்சாதனைகளுக்கமைய

10.1.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

I. நியமனத்தை உறுதிப்படுத்தியிருத்தல்.
II. சேவைப் பிரிவின் IIIதரத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட 10 சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருத்தல்.
III. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பதவியுயர்வு தினத்திற்கு முன்னர் 10 ஆண்டுகளுக்கு திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விடக்கூடிய செயற் சாதனையினைக் காண்பித்திருத்தல்.
IV. பதவிஉயர்வு தினத்திற்கு அண்மித்த 5 ஆண்டுகளுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
V. உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்
VI. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினமன்று சித்தியடைந்திருத்தல்.

10.1.1.2. பதவி உயர்வுத் திட்டம்

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களை ஐஐ தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்காக நியமனப் பொறுப்பாளருக்கு உரிய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப்படிவத்திற்கமைய கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் நியமனப் பொறுப்பாளரினால் தகைமைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமை பெறும் தினம் தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் ஐஐ தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்கு நியமனப் பொறுப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

10.2. விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 3 சேவைப் பிரிவின் II தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துதல்

10.2.1. பொதுவான செயற்சாதனைகளுக்கமைய

10.2.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. சேவைப் பிரிவின் II ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட 10 சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருத்தல்.
II. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீடுகளுக்கமைய பதவி உயர்வு தினத்திற்கு முன்னர் 10 வருடங்கள் திருப்திகரமான அல்லது அதனை விட உயரிய செயற்சாதனையைக் காண்பித்திருத்தல்.
III. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினமன்று சித்தியடைந்திருத்தல்.

IV. பதவி உயர்த்தும் தினமன்று அண்மித்த (05) வருடங்களுக்கு திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

V. உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

VI. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.2.1.2. பதவி உயர்வு முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களை I ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்காக நியமனப் பொறுப்பாளருக்கு உரிய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப்படிவத்திற்கமைய கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் நியமனப் பொறுப்பாளரினால் தகைமைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமை பெறும் தினம் தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் I தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்கு நியமனப் பொறுப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

10.3. விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவையின மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப்பிரிவின் III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்குதல்.

10.3.1. பொதுவான செயற்சாதனைகளுக்கமைய

10.3.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. சேவைப் பிரிவின் III ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட 10 சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருத்தல்.

II. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீடுகளுக்கமைய பதவிஉயர்வு தினத்திற்கு முன்னர் 10 வருடங்கள் திருப்திகரமான அல்லது அதனை விட உயரிய செயற்சாதனையைக் காண்பித்திருத்தல்.

III. பதவிஉயர்வு தினத்திற்கு அண்மித்த 5 ஆண்டுகளுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

IV. உரிய மட்டத்தில் ஏனைய அரச மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்

V. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினமன்று சித்தியடைந்திருத்தல்.

10.3.1.2. பதவி உயர்வுத் திட்டம் :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தரை II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக நியமனப் பொறுப்பாளருக்கு உரிய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பிக்கும் பட்சத்தில் நியமனப் பொறுப்பாளரினால் தகைமைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமைபெறும் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

10.4. விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப்பிரிவின் II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்குதல்.

10.4.1. பொதுவான செயற்சாதனைகளுக்கமைய

10.4.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

I. சேவைப் பிரிவின் II ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட 10 சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருத்தல்.

II. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீடுகளுக்கமைய பதவிஉயர்வு தினத்திற்கு முன்னர் 10 வருடங்கள் திருப்திகரமான அல்லது அதனை விட உயரிய செயற்சாதனையைக் காண்பித்திருத்தல்.

III. பதவிஉயர்வு தினத்திற்கு அண்மித்த 5 ஆண்டுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

IV. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினமன்று சித்தியடைந்திருத்தல்.

10.4.1.2. பதவி உயர்வுத் திட்டம்

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தரை I ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்காக நியமனப் பொறுப்பாளருக்கு உரிய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பிக்கும் பட்சத்தில் நியமனப் பொறுப்பாளரினால் தகைமைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமைபெறும் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

10.5. விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவையின் நிறைவேற்று சேவைப் பிரிவின் III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்குதல்.

10.5.1. பொதுவான செயற்சாதனைகளுக்கமைய

10.5.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்

II. நிறைவேற்று சேவைப் பிரிவின் III ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட 10 சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருத்தல்.

III. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீடுகளுக்கமைய பதவிஉயர்வு தினத்திற்கு முன்னர் 10 வருடங்கள் திருப்திகரமான அல்லது அதனைவிட உயரிய செயற்சாதனையைக் காண்பித்திருத்தல்.

IV. பதவிஉயர்வு தினத்திற்கு அண்மித்த 5 ஆண்டுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

V. உரிய மட்டத்தில் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

VI. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினமன்று சித்தியடை ந்திருத்தல்.

10.5.1.2. பதவி உயர்வுத் திட்டம்

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தரை IIஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக நியமனப் பொறுப்பாளருக்கு உரிய உத்தியோகத்தரினால் உரிய மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பிக்கும் பட்சத்தில் நியமனப் பொறுப்பாளரினால் தகைமைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமைபெறும் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் IIஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

10.6. விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவையின் நிறைவேற்று சேவைப்பிரிவின் II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்குதல்.

10.6.1. பொதுவான செயற்சாதனைகளுக்கமைய

10.6.1.1. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. சேவைப் பிரிவின் II ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 07 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட 07 சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றிருத்தல்.

II. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பதவிஉயர்வு தினத்திற்கு முன்னர் 07 வருடங்கள் திருப்திகரமான அல்லது அதனைவிட உயரிய செயற்சாதனையைக் காண்பித்திருத்தல்.

III. பதவிஉயர்வு தினத்திற்கு அண்மித்த 05 ஆண்டுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

IV. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினமன்று சித்தியடைந் திருத்தல்.

*10.6.1.2.* பதவி உயர்வுத் திட்டம்

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தரை I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக நியமனப் பொறுப்பாளருக்கு உரிய உத்தியோகத்தரினால் உரிய மாதரிப்படிவத்திற்கமைய விண்ணப்பிக்கும் பட்சத்தில் நியமனப் பொறுப்பாளரினால் தகைமைகளைப் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமைபெறும் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

**குறிப்பு** - பொதுவான மட்டத்திலான செயற்சாதனைக்கமைய பதவிஉயர்வு வழங்கும்போது உரிய தினத்திற்கு வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடையாத உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுத் தினம் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைவதற்குத் தாமதமான காலத்திற்குச் சமமான காலத்தினால் தாமதப்படுத்த வேண்டும்.

*11.* **பதவிக்கு நியமித்தல்**

| பதவி | நியமிக்கும் பொறுப்பாளர் |
|---|---|
| விளையாட்டுப் பணிப்பாளர் | அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கமைய விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைப் பிரிவின் I தரத்தின் உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அரச சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் தகைமைகளைப் பரிசீலனை செய்து விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்கு அவ் உத்தியோகத்தர்களில் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். |

*12.* அரச சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள் :- சம்பந்தப்பட்டதல்ல

*13.* **இடைக்கால ஒழுங்கு விதிமுறைகள்** :-

*13.1.* இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையவுள்ள உரிய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இவ் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்ததாக கருதி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

*13.2.* இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையவுள்ள உரிய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்காக உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக இச்சேவைப் பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தும் தினம் தொடக்கம் 3 வருடங்கள் சலுகைக்காலம் வழங்கப்படும்.

*13.3.* முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 3 சேவைப்பிரிவில் II தரத்தில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் உள்ள 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைந்திருப்பின் அவ் உத்தியோகத்தர்களுக்காக இச்சேவைப்பிரமாணக் குறிப்பின் கீழ் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்ததாக கருதி உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

*14.* **தர முறைக்கு உள்ளீர்ப்புச் செய்தல்**

இச் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தும் தினமன்று சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மாத்திரம் உரியதாகும். உரிய தினமன்று பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் அதற்கு இணைவான சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள சம்பள அளவின் கீழ் சம்பளம் பெறும் சகல உத்தியோகத்தர்களும் தாபன விதிக் கோவையின் VII ஆம் வாசகத்தின் 04 வது பிரிவின் ஒழுங்கு விதிகளுக்குட்பட்டு கீழ் குறிப்பிடப்பட்டவாறு உள்ளீர்ப்பு செய்யப்படுவர்.

சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவ்வப் பதவிக்கு நியமிக்கப்பட்ட தினத்தை அடிப்படையாகக் கொண்டாகும். இது எவ்வாறாக இருப்பினும் உள்ளீர்ப்புக் காரணமாக உரிய நபரின் சம்பளப்படி உயர்வு தினத்தில் மாற்றம் ஏற்படக்கூடாது என்பதுடன் அத்தினம் உள்ளீர்ப்புக்கு முன் இருந்த சம்பளப்படி உயர்வு தினமாக மாற்றமின்றி அமுல்படுத்தப்பட வேண்டும். அத்துடன் சம்பள மறுசீரமைப்புக்களில் உரிய நபர் இறுதியாகப் பெற்றிருந்த சம்பள அளவு புதிய சம்பள அளவிற்கமைவாக இருப்பதற்கமைய தாபன விதிக் கோவையின் VII ஆம் வாசகத்தின் 4.4 ஆம் பிரிவிற்கமைய அடுத்த உயர் சம்பள அளவில் நிலைப்படுத்தக்கூடாது.

I. தற்போது MN-1-2016 சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்தின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் தொடராக மீள் கட்டமைக்கப்பட்ட MT-2-2016 சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்திற்கும்,

II. தற்போது MN-3-2016 சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்தின் கீழ் சம்பளம் பெறும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவியில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடராக அச்சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்திற்கும்,

III. தற்போது MN-3-2016 சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்தின் கீழ் சம்பளம் பெறும் செயற்திட்ட உத்தியோகத்தர் / நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் / மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்/ பதவியிலுள்ள உத்தியோகத்தர்கள் MN-7-2016 சம்பள அளவிற்கும்,

IV. தற்போது SL-1-2016 சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்தின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் தொடராக அச்சம்பள அளவில் III, II மற்றும் I ஆம் தரத்திற்கும் உள்ளீர்ப்பு செய்யப்படுவர்.

15. **வரைவிலக்கணம்**

1.1. ''பிரமாணக் குறிப்பு கோவை'' எனக்கருதப்படுவது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத் துறை சார்ந்த உத்தியோகத்தரின் இணைந்த சேவைப் பிரமாணக்குறிப்புக் கோவையாகும்.

1.2. ''விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை'' எனக் கருதப்படுவது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையாகும்.

1.3. ''விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்கள்'' எனக்கருதப்படுவது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத் துறை சார்ந்த உத்தியோகத்தர் களாகும்.

1.4. ''தொடர்ச்சியான சேவைக்காலம்'' எனக் கருதப்படுவது சம்பளமற்ற விடுமுறைக் காலம் உள்ளடங்காத இருப்பினும் அமைச்சரவையினால் கொள்கை அடிப்படையில் தொடர்ச்சியான சேவைக்காலமாகக் கருத வேண்டும். விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் மற்றும் விடுமுறைக் காலத்தை உள்ளடக்கி உத்தியோகத்தர் தமது பதவியில் உரிய சம்பளத்தைப் பெற்றிருந்த சேவைக்காலமாகும்.

16. சகல நியமனங்கள் தொடர்பிலும் அரச சேவை ஆணைக்குழுவின் 2009.02.20 ஆம் திகதிய 1598/30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட செயற்சாதனை ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நிறுவனக் கோவைகளுக்குரியதாகும்.

17. இச் சேவைப்பிரமாணக் குறிப்பில் ஒழுங்கு விதிகள் வகுக்கப்படாதுள்ள ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் இது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

**இணைப்பு 01**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப்பிரிவு 2 ஆம் தரத்தின் சேவைப் பிரிவின் III ஆம் தரத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்காக I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் : (நியமனத் தினம் தொடக்கம் 3 வருடங்களுக்குள் சித்தியடைய வேண்டும்.)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. தாபன விதிக் கோவை தொடர்பான அடிப்படை அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. விளையாட்டு தொடர்பான பொது அறிவினைப் பரிசோதனை செய்தல் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தாபன விதிக் கோவை மற்றும் செயற்சாதனை ஒழுங்கு விதிக் கோவை | 1 தாபனக் கோவையின் I - V, VII, XII, XIV, XVII, XXIV, வாசகம் |
| 2. விளையாட்டு தொடர்பான பொது அறிவினைப் பரிசோதனை செய்தல் | மெய்வல்லுனர் விளையாட்டு மற்றும் குழு விளையாட்டு தொடர்பான சட்ட ஒழுங்கு விதிமுறைகள் |

*இணைப்பு 02*

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப்பிரிவு 2 ஆம் தரத்தின் சேவைப் பிரிவின் II ஆம் தரத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்காக II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் : (II தரத்திற்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர்)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. கணினிப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. நடுவர் அனுமதிப் பத்திரங்கள் 2 ஐப் பெற்றிருக்க வேண்டும். | | | |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. கணினிப் பரீட்சை | 1. மைக்றோ சொப்ட் ஒப்பீஸ்<br>2. மைக்றோ சொப்ட் வேட்<br>3. மைக்றோ சொப்ட் எக்ஸ்சல்<br>4. மைக்றோ சொப்ட் பவர் பெயின்ட (மென் பொருள் செயற்பாடுகள்)<br>5. இணையத்தள் பயன்பாடு தொடர்பான அடிப்படை அறிவு |
| 2. நடுவர் அனுமதிப் பத்திரங்கள் 2 ஐப் பெற்றிருக்க வேண்டும். | உரிய சங்கத்தினால் எழுத்து மூல மற்றும் பிரயோகப் பரீட்சை நடாத்தி வழங்கியிருக்க வேண்டும். |

*இணைப்பு 03*

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப்பிரிவு 2 ஆம் தரத்தின் சேவைப் பிரிவின் I ஆம் தரத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்காக III ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் : (I தரத்திற்கு நியமனம் பெற்று 5 வருடங்கள் கடப்பதற்கு முன்னர்)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நிதிக் கோவை தொடர்பான அடிப்படை அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பயிற்சி நிகழ்ச்சி நிரல் தொடர்பான பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. நிதிக் கோவை தொடர்பான அடிப்படை அறிவு | நிதிக் கோவை IV, V, VI, IX வாசகம் |
| 2. பயிற்சி நிகழ்ச்சி நிரல் தொடர்பான பொது அறிவு | பயிற்சியின் மூல அம்சங்கள், பயிற்சி முறைகள் தொடர்பான அறிவு |

**இணைப்பு 04**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப்பிரிவின் III ஆம் தரத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கான I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் : (நியமனத் திகதி தொடக்கம் 3 வருடங்களுக்குள் சித்தியடைய வேண்டும்)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளகின் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. பயிற்சி நிகழ்ச்சி நிரலுக்கமைய உடற் தகைமை மற்றும் பயிற்சித் திட்டங்கள் | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பயிற்றுவிப்பாளர் பதவிக்குரியதான நடுவர் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல் | | | |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. பயிற்சி நிகழ்ச்சி நிரலுக்கமைய உடற் தகைமை மற்றும் பயிற்சித் திட்டங்கள் | பயிற்சி நிகழ்ச்சி நிரலுக்கமைய உடற் தகைமை மற்றும் பயிற்சித் திட்டமிடல்களைத் தயாரிப்பது தொடர்பான அறிவு |
| 2. பயிற்றுவிப்பாளர் பதவிக்குரியதான நடுவர் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல் | உரிய சங்கத்தினால் எழுத்து மூல மற்றும் பிரயோகப் பரீட்சையை நடாத்தி கட்டம் 1, கட்டம் 2, கட்டம் 3 என வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும். |

**இணைப்பு 05**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப்பிரிவின் IIIஆம் தரத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் (விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பதவிக்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர்)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு தொடர்பாக எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு தொடர்பாக எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் | வருடாந்த, மாதாந்த, நாளாந்த பயிற்சித் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான அறிவு |

**இணைப்பு 06**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப்பிரிவின் I ஆம் தரத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான III ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் (விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பதவிக்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர்)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. தேர்தெடுக்கப்பட்ட விளையாட்டுக்காக பிரயோகப் பயிற்சி திட்டங்களைச் சமர்ப்பித்தல் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தேர்தெடுக்கப்பட்ட விளையாட்டுக்காக பிரயோகப் பயிற்சித் திட்டங்களைச் சமர்ப்பித்தல் | விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை பங்கேற்கச் செய்து பிரயோகப் பயிற்சி அமர்வு நேர்முகப் பரீட்சை சபை முன்னிலையில் மேற்கொள்ளல் |

**இணைப்பு 07**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் நிறைவேற்று சேவைப் பிரிவின் III தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

1 பரீட்சை தொடர்பான விபரங்கள் (III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர்)

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. விளையாட்டுச் சட்டம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. நிதி ஒழுங்குக் கோவை | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. நிர்வாகம் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

2 பரீட்சை நடாத்தும் பொறுப்பாளர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தின் மூலம்

3 பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

4 பரீட்சைக்கான பாடவிதானம் :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. விளையாட்டுச் சட்டம் | விளையாட்டுச் சட்டம் சார்ந்ததாகத் தயாரிக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட நுண்ணறிவு வினாத்தாள் |
| 2. நிதி ஒழுங்குக் கோவை | இலங்கை நிதி நிர்வாகம்<br><br>01. அரச நிதி தொடர்பான பாராளுமன்ற நிர்வாகம்<br>02. இணைந்த நிதியம் மற்றும் அதன் செயற்பாடுகள்<br>03. ஒதுக்கீட்டின் நோக்கம் மற்றும் ஒதுக்கீட்டு முறை<br>04. நிலையற்ற சந்தர்ப்பங்களுக்கான நிதியம்<br>05. திறைசேரியின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள்<br>06. கணக்காய்வாளர் அவரது அதிகாரங்களும் மற்றும் செயற்பாடுகளும்<br>07. அரச கணக்குத் தொடர்பான செயற்குழு சபை (COPA)<br>08. பொது வர்த்தகம் தொடர்பான செயற்குழு சபை (COPE) |
| 3. நிர்வாகம் | 01. துறைசார்ந்த செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அது தொடர்பான ஒழுங்கமைப்புத் திட்டங்கள்<br>02. தாபன விதிக் கோவையின் கீழ் குறிப்பிடப்பட்ட வாசகங்கள்<br><br>I,II,III,V,VI,VII,IX,XI,XII,XXIII,XXV,XXVI, XXVII,XXVIII,XXIX,XXX,XXXI,XXXII, XXXIII,XLVII மற்றும் XLVIII<br>03. அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்குச் சட்ட விதிகள்<br>04. அலுவலக முகாமைத்துவம் |

**இணைப்பு 08**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் நிறைவேற்று சேவைப் பிரிவின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

இரண்டாவது தரத்திற்குப் பதவிஉயர்வு பெற்று 3 வருடங்களுக்குள் ஒரு விளையாட்டை தேர்ந்தெடுத்து அதன் ஒரு பிரிவு அல்லது பல பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அதன் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்குரியதாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் தொடர்பிலான மாதிரியைப் பயன்படுத்தி 3000 சொற்களை விடக்குறையாத கையேட்டினைத் தயாரித்து விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் பரிசோதனை சபை அல்லது அங்கீகரிக்கப்படும் நிறுவனம் ஒன்றிற்குச் சமர்ப்பித்தல்

**இணைப்பு 09**

**விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் நிறைவேற்று சேவைப் பிரிவின் I ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான 3 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

I ஆவது தரத்திற்கு பதவிஉயர்வு பெற்று 5 வருடங்களுக்கு தேசிய விளையாட்டுக் கொள்கையினை இனங்காணுதல், தயாரித்தல், அபிவிருத்தி தொடர்பான யோசனைகள் மற்றும் சர்வதேச விளையாட்டுக் கொள்கைகளினை ஆய்வு ரீதியாக ஆராய்ந்து விளையாட்டுக் கொள்கை தொடர்பாக 5000 சொற்களைக் கொண்ட கையேட்டினைத் தயாரித்து விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் பரிசோதனை சபை அல்லது அங்கீகரிக்கப்படும் நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தல்

*உப ஆவணம் 01*

**பொறுப்பளிக்கப்படும் செயற்பாட்டுப் பணிகள்**

விளையாட்டு உத்தியோகத்தர்

1. விளையாட்டு பயிற்சி மத்திய நிலையத்தை முறையாகப் பேணல்.
   i. பயிற்சி மத்திய நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள சகல விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புக்கள்.
   ii. பயிற்சி மத்திய நிலையத்திற்குரிய ஏனைய பொருட்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
2. விளையாட்டுப் பயிற்றுவிப்பு எதிர்வரும் வேலைத்திட்டங்களுக்கமைய முன்னெடுத்தல்.
3. விளையாட்டுப் பாடத்திற்குரிய திட்டங்கள்.
4. i. விளையாட்டு உயிரியல் புள்ளி விபர அறிக்கை
   ii. விளையாட்டுத் திறமை அறிக்கை
   iii. ஆராய்ச்சி அறிக்கை
   iv. விளையாட்டு சமுகமளிப்பு ஆவணம் - பேணல்
5. விளையாட்டுப் போட்டிகள், பயிற்சி முகாம் ஒழுங்கமைப்பு மற்றும் போட்டி நடுவர்
6. விளையாட்டுப் பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கமைய மாகாண விளையாட்டு அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவை சபை, ஏனைய அரச அல்லது அரச சார்பற்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் விளையாட்டுச் செயற்திட்டத்திற்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

**விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்**

மேற்கூறப்பட்ட 1-6 வரையான கடமைகளுக்கு மேலதிகமாக

1. பயிற்சிச் செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் களுக்குத் தேவையாக தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்
2. விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் திறமை மட்டம், முன்னேற்றங்களைப் பரிசோதிப்பதற்காக உரிய பயிற்றுவிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுப் பரிசோதனையினை ஒழுங்கு செய்தல்.
3. விளையாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்குப் பொறுப்பாகச் செயற்படல்.
4. பயிற்சி மத்திய நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணப் பராமரிப்பு, களஞ்சியப்படுத்தல் மற்றும் வெளியிடுவது தொடர்பான மேற்பார்வைகள்.
5. பயிற்சி மத்திய நிலையங்களுக்குரிய ஏனைய பொருட்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகத் தேவையான செயற்பாடுகள்.
6. பொருட் பட்டியல் புத்தகங்களைச் சமநிலைப்படுத்திப் பேணல்.
7. பயிற்சி மத்திய நிலையங்களில் விளையாட்டு மைதான தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்தல்.
8. சகல பயிற்சி மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான முனனேற்ற அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.
9. விளையாட்டுப் பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கமைய மாகாண விளையாட்டு அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவை சபை, ஏனைய அரச அல்லது அரச சார்பற்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் விளையாட்டுச் செயற்திட்டத்திற்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

**தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர்**

1. விளையாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்குப் பொறுப்பாகச் செயற்படல்.
2. பயிற்சி மத்திய நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணப் பராமரிப்பு, களஞ்சியப்படுத்தல் மற்றும் வெளியிடுவது தொடர்பான மேற்பார்வைகள்.
3. பயிற்சி மத்திய நிலையங்களுக்குரிய ஏனைய பொருட்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகத் தேவையான செயற்பாடுகள்.

4. பொருட் பட்டியல் புத்தகங்களைச் சமநிலைப்படுத்திப் பேணல்.
5. பயிற்சி மத்திய நிலையங்களில் விளையாட்டு மைதான தொழில்நுட்பத் தேவைகளை நிறைவு செய்தல்.
6. சகல பயிற்சி மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான முனனேற்ற அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.
7. உதவி விளையாட்டுப் பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கமைய மாகாண விளையாட்டு அமைச்சு, உள்ளூராட்சி மன்ற அமைச்சு, தேசிய இளைஞர் சேவை சபை, ஏனைய அரச அல்லது அரச சார்பற்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் விளையாட்டுச் செயற்திட்டத்திற்கான மேற்பார்வை

**தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர்**

1. தாம் இணைப்பு செய்யும் விளையாட்டுக்களை நாட்டில் விரிவுபடுத்தல் மற்றும் முன்னேற்றுவதற்குரியதான திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல் மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்
2. திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை இனங்காணும் வேலைத்திட்டங்களை வகுத்தல்.
3. விளையாட்டுக்குரியதான தகவல்களைக் கொண்ட புள்ளி விபரத் தொகுதியினை வகுத்தல் (உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சிகள், நடுவர்கள், மற்றும் விளையாட்டு வீரர்களின் வெற்றிகள் உட்பட திறமைகள் தொடர்பாக)
4. உரிய விளையாட்டின் அபிவிருத்திக்காக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுடன் இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்
5. விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் பாட அறிவினைச் சமகாலப்படுத்துவதற்காக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்.
6. உரிய விளையாட்டுக்காக மாவட்ட குழாம்களுக்கிடையே போட்டிகளை நடாத்துதல்.
7. தேசிய விளையாட்டுச் சங்கம் /சம்மேளனங்களுடனான இணைப்புக்கள், ஆலோசனை மற்றும் மேற்பார்வை.
8. விளையாட்டு அமைச்சின் விளையாட்டுக் குழாமை முன்னெடுத்தல் மற்றும் அதன் மூலம் தேசிய குழாமைப் பேசித்தல்
9. தேசிய விளையாட்டு விழாவின் உரிய போட்டி ஏற்பாடுகள்
10. மாகாண விளையாட்டு அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவை மன்றம் அல்லது ஏனைய அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் வேலைத்திட்டங்களின் போது தேவையான உதவிகளை வழங்குதல்.

**தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர்**

விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக வருடாந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல்

1. தேசிய மட்டத்தில் விளையாட்டுப் பயிற்சி முகாம் மற்றும் விளையாட்டு சக்திச் செயற்திட்டங்களுக்குரிய கருத்தரங்குகளைத் தேர்ந்தெடுக்கும் வேலைத்திட்டங்களை வகுத்தல்
2. விளையாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் கருத்தரங்கள் தொடர்பிலான வேலைத்திட்டங்களை வகுத்தல்.
3. சர்வதேச போட்டிகளுக்காகக் கலந்து கொள்ள வருகைதரும் உள்நாட்டு விளையாட்டு குழுக்கள் மற்றும் போட்டிகளுக்காக கலந்து கொள்வதற்காக வருகைதரும் வெளிநாட்டு விளையாட்டுக் குழுக்களை வரவேற்கும் வேலைத்திட்டங்களை வகுத்தல்

**உதவி விளையாட்டுப் பணிப்பாளர் /பிரதி விளையாட்டுப் பணிப்பாளர்**

1. விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், செயற்திட்ட உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்கள், மேற்பார்வை செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகச் செயற்படல், அவர்களின் எதிர்கால வேலைத்திட்டங்கள், விடுமுறை மற்றும் பிரயாணச் செலவின விண்ணப்பம் மற்றும் சகல அறிக்கைகளையும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்.
2. மாவட்ட விளையாட்டு நிர்வாக சங்கத்தை முறையாகப் பேணுவது தொடர்பான மேற்பார்வை, ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பதிவு, அச்சங்கங்களினால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் பங்கேற்பு, தரம் மற்றும் முறையான செயற்பாடுகள் தொடர்பில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராகச் செயற்படல்.
3. விளையாட்டு சக்தி வேலைத்திட்ட மேற்பார்வை மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் மாதாந்தச் சமுகமளிப்பு ஆவணம் மற்றும் செயற்சாதனை அறிக்கையினைப் பரிசீலனை செய்ததன் பின்னர் போசாக்குக் கொடுப்பனவிற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
4. மாவட்டத்தின் சகல விளையாட்டு மத்திய நிலையங்களுக்கிடையேயான இணைப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாடுகள்
5. விளையாட்டு அமைச்சு, கல்வி அமைச்சு, மாகாண விளையாட்டு, மாகாண கல்வி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கிடையிலான தொடர்புகள் மூலம் விளையாட்டினை ஊக்குவிப்பதற்காகத் தேவையான திட்டங்களை வகுத்தல், ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.

6. விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் நடாத்தப்படும் போட்டி மேற்பார்வை உட்பட தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
7. விளையாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் மாவட்ட விளையாட்டு இணைப்பு உத்தியோகத்தர்களூடான இணைப்புப் பணிகள்

**விளையாட்டுப் பணிப்பாளர்**

1. மாவட்ட மற்றும் தேசிய விளையாட்டுச் சங்க இணைப்பு உட்பட மேற்பார்வைகள்
2. விளையாட்டுச் செயற்திட்ட மேற்பார்வைகள்
3. விளையாட்டுத் திடல், விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுகளுக்குரியதான வசதிகள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.
4. விளையாட்டு சக்தி வேலைத்திட்டங்கள் மற்றும் சகல பயிற்சி உட்பட தொழில்நுட்பச் செயற்பாட்டு மேற்பார்வைகள்.
5. சகல விளையாட்டுப் போட்டி இணைப்புக்கள் மற்றும் மேற்பார்வைகள்
6. விளையாட்டுத் திட்டங்களை வகுத்தல்.
7. விளையாட்டுப் பயிற்சிச் செயற்பாடுகள், விளையாட்டு போட்டிகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி உட்பட விளையாட்டுத் துறைக்குரியதான சகல செயற்பாடுகள் தொடர்பிலும் முகாமைத்துவ மேற்பார்வை உட்பட உரிய ஆலோசனைகளை வழங்குதல்.

10-183

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.